2012 மே 8]

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி என்.எல்.சி. தொழிலாளர்கள் கடந்த 15 நாட்களாக ஊதிய உயர்வு, பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, AITUC சங்கத் தொழிலாளர்கள் 15,000 பேர் வேலைநிறுத்தப் போராட்டத்திலே ஈடுபட்டு வருகிறார்கள். மத்திய அரசாங்கம் கண்டுகொள்வதே இல்லை. மாநிலத்தில் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்படாமல் இருப்பதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலால் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் கடையம், வடகரை, தென்காசி, சங்கரன்கோவில் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் மரணமும் அடைந்து இருக்கிறார்கள். இந்த டெங்கு காய்ச்சலைப் பரப்பக்கூடிய கொசுக்களைக் கண்டறிவதற்கும், பரிசோதனை கிட்டுகள் உட்பட— இது இரத்த செல்களைக் கடுமையாகப் பாதித்து, உடனடி மரணத்தைக் கொண்டு வரும் என்பதால், உடனடியாக இரத்தம் உட்பட—தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், இந்தக் காய்ச்சலை உடனடியாகத் தடுப்பதற்குமான ஏற்பாடுகளை நம்முடைய சுகாதாரத் துறை எந்த அளவிலே செய்து கொண்டிருக்கிறது? உடனடியாக இந்தப் பிரச்சினையில் தலையீடு செய்ய வேண்டுமென்ற முறையிலே கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏற்கெனவே பன்றிக் காய்ச்சலால் பலர் பாதிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 11 பேருக்கும் மேற்பட்டோர் இறந்திருக்கிறார்கள். இந்த நிலையில் மிகுந்த ஆபத்தான டெங்கு

[திரு. சு. குணசேகரன்] [2012 மே 8

காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதாக ஒரு செய்தி வந்து கொண்டிருக்கிறது. எனவே, அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக நமது சுகாதாரத் துறை, போர்க்கால அடிப்படையிலே ஈடுபட வேண்டும். ஏனென்று சொன்னால், டெங்கு காய்ச்சலால் 2, 3 நாட்களுக்குள்ளாகவே மனித உயிரிழப்புக்கு ஆளாக்கப்படுகிறார்கள். எனவே, இதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

முற்பகல் 10-30

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அண்மையில் டெங்கு காய்ச்சல் பரவலால் 6 பேர் உயிரிழந்த செய்தி வெளிவந்திருக்கிறது. டெங்கு காய்ச்சல் திடீரென்று வருவதில்லை என்றாலுங்கூட, சுகாதாரக் கேட்டின் காரணமாக இந்த நோய் கொசுக்கள்மூலமாகப் பரவுகிறது. குறிப்பாக இந்த நோய் குழந்தைகள், பெரியவர் என்று வித்தியாசமின்றி வந்தாலும்கூட, மற்றவர்களைக் காட்டிலும் திடகாத்திரமாக உள்ள குழந்தைகளையே இந்த நோய் தாக்கக் கூடிய விசேஷத் தன்மை கொண்டது. குழந்தைகளை அதிக அளவில் தாக்கக்கூடிய காரணத்தினாலும் குழந்தைகள் அதிக அளவில் பாதிக்கப்படுகின்ற காரணத்தினாலும், இந்த டெங்கு காய்ச்சல் பரவாமல் உடனடியாகத் தடுத்திட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு டாக்டர் அவர்களே, தாங்கள் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே கவனத்திற்கு மட்டும் கொண்டு வரலாம். ஆனால் தாங்கள் டாக்டர் என்ற முறையிலே விவரங்களுக்குள் போக வேண்டாம்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி. இந்த டெங்கு காய்ச்சல் பரவுவதற்குக் காரணமாக இருக்கக்கூடிய open tanks, அதாவது, தண்ணீர் வெளியே தேங்காமலிருப்பதற்கு உடனடியாக உள்ளாட்சிகள், சுகாதாரத் துறைகள் இணைந்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாக சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து, இன்னும் அந்தப் பேச்சு வார்த்தை முடிவுக்கு வராமல் இருக்கின்றது. அதன் காரணமாக அவர்களும் பாதிக்கப்பட்டு, கரும்பு விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு முழுவதும் கரும்பு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து அதை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.*

(அ) நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக என்.எல்.சி. தொழிலாளர்களுடைய* strike *நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மத்திய அரசு தொழிலாளர் ஆணையத்தின்மூலமாக இதைப் பற்றிப் பேசுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு மேற்கொண்டு அந்த வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு கடந்த காலத்தில் ஆண்டு கொண்டிருந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு, இதுபற்றிக் கண்டு கொள்ளவில்லை. அவர்கள் மத்திய அரசில் அங்கம் வகித்தாலும்கூட, இன்றைக்கு என்.எல்.சி. தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றால், அவர்கள் குரல் கொடுக்கவே இல்லை.*

இன்றைய காலைப் பத்திரிகையில்கூட தொழிலாளர் நலத்தைப் பற்றிக் கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசினுடைய தலைவர் முதலைக் கண்ணீர் வடிக்கிறார். ஆனால், அவர் அங்கம் வகிக்கின்ற மத்திய அரசு இதைப் பற்றி ஒன்றும் பேசவில்லை. ஆனாலும்கூட மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு உடனடியாக மத்திய அரசை வலியுறுத்தும் என்று உங்கள் மத்தியிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலால் பாதிப்பு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

TRUTH ALONE TRIUMPHS

2012 மே 8]

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், திருநெல்வேலி மற்றும் சங்கரன்கோவில் சுகாதாரப் பணிகள் மாவட்டங்கள் உள்ளன. இதில் சங்கரன்கோவில் சுகாதாரப் பணிகள் மாவட்டத்தில் இதுவரை 81 நபர்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதில் கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் மட்டும் 16 நபர்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடையநல்லூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகமான மக்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதன் காரணமாக காய்ச்சல் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக சுகாதாரப் பணியாளர்கள்மூலம் வீடு வீடாகச் சென்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

முற்பகல் 10-35

காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்காகக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு வீடு வீடாகச் சென்று ஆய்வு செய்து, காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய சிகிச்சை அளிக்கப்படுகிறது. கொசுக்கள் உற்பத்தியைத் தடுப்பதற்காக 4 சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள பூச்சியியல் வல்லுநர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இக்குழு, வீடு வீடாகச் சென்று, வீட்டின் உள்ளே சேமிக்கப்பட்டுள்ள தண்ணீர் பாத்திரங்களில், கொசுப் புழு உற்பத்தி உள்ளதா என்பதைக் கண்டறிந்து அது பரவாமல் இருக்க 'டென்னிபாப்' மருந்து கலக்கப்படுகிறது. வியாதியைப் பரப்பும் கொசுக்களை அழிப்பதற்காக ஒவ்வொரு வீட்டிற்குள்ளேயும் மற்றும் வெளியிலேயும் புகை மருந்து அடிக்கப்படுகிறது.

கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் 5 ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மாற்றுப் பணியில் அமர்த்தப்பட்டு, நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்று, கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்குக் கூடுதலாக ஒரு குழந்தைகள் சிறப்பு மருத்துவர் மாற்றுப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார். கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் platelet கணக்கிடும் கருவி அமைக்கப்பட்டுள்ளது. தென்காசி அரசு மருத்துவமனையில் டெங்கு நோயாளிகளுக்கு platelet கொடுக்கும்பொருட்டு ஒரு கருவி அமைக்கப்பட்டுள்ளது.

[டாக்டர் வி.எஸ். விஜய்] [2012 மே 8

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மேலும் 5-5-2012 அன்று, குடும்ப நலத் துறை சிறப்புச் செயலாளர் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்ட இயக்குநர் தலைமையில் திருநெல்வேலியில் ஒரு ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில், இதுவரை எடுக்கப்பட்ட, எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் திட்ட இயக்குநர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அதன்படி அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சென்னை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையைச் சேர்ந்த இரண்டு குழந்தைகள் நல மருத்துவர்கள் களப்பணி மேற்கொண்டு, மேலும் இந்நோயின் தாக்கம் பரவாதபடி தீவிர சிகிச்சை அளித்துவருகிறார்கள். இதற்காகப் பொது சுகாதாரத் துறை இயக்குநர் (மருத்துவம்), ஊரக நலத் துறை இயக்குநர் மற்றும் மருத்துவக் கல்வி இயக்குநர் தொடர்ந்து முகாமிட்டு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், டெங்கு காய்ச்சலால் இதுவரை 8 இறப்புகள் நடந்துள்ளன. பொதுமக்கள், காய்ச்சல் அறிகுறி தென்பட்டவுடன் உரிய மருத்துவரை அணுகி சிகிச்சை பெற்றிருந்தால் இறப்புகளைத் தடுத்திருக்கலாம். நோய் முற்றிய நிலையில் இவர்கள் அரசு மருத்துவமனையை அணுகியுள்ளார்கள். தற்போது, தென்காசி மருத்துவமனை மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தட்டணுக்கள், இரத்தம் மற்றும் plasma *திரவங்கள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளன.*

மாவட்ட நிருவாகம், நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பணியாளர்கள்மூலம் இந்நோய் பற்றி விழிப்புணர்வு நடத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட சிறப்பு நடவடிக்கைகளின்மூலம் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் தீவிரமாகத் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தற்போது காய்ச்சல் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நோயினை முற்றிலும் கட்டுப்படுத்துவதற்கு சென்னையிலுள்ள National Institute of Epidemiology and Vector Control and Research Control, *புதுச்சேரி போன்ற நிறுவனங்களில் இருந்து அறிவியல் நிபுணர்கள் குழு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு*

அறிக்கை சமர்ப்பிக்க உள்ளது. அதன் அடிப்படையில். அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர் அவர்கள்.*

திரு. பி.ஜி. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாரும் எல்லாமும் பெறவேண்டுமென்ற உயர்ந்த இலட்சியத்தோடு பொற்கால ஆட்சி நடத்திவரும் ஏழையெளிய மக்களின் விடிவெள்ளி மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2011-2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் 2 ஆவது முதல் 5 ஆவது வரையிலான 4 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசால் நிறுத்தப்பட்ட ஈட்டுக் கூலியை வழங்குதல் மற்றும் பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்கு மானியம் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் 2 அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருப்பதோடு, விவசாயத்திற்கு அடுத்தபடியாக கிராமப்புற*